
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), சின்னசேலம், அவர்களின் கடிதம் ந.க.எண். ஆ2/1504/2025, நாள். 14.08.2025-ல் சாலை சான்று பெறப்பட்டதின் அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்பபடுகிறது.




# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
# கள்ளக்குறிச்சி மாவட்டம்

வ

<u>உலகங்காத்தான் ஊராட்சி</u>

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், உலகங்காத்தான் ஊராட்சி/ கிராமம், சர்வே.எண்கள்:225/7A1,225/9 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

| | |
|---|---|
| இனையதள விண்ணப்ப எண் | : PAUNZYJF/51111/2025 |
| அளவு | : 1:400 |

**குறிப்பு:**

| | |
|---|---|
| (I) மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | : 1.72 ஏக்கர்(அ) 6968.00 ச.மீ |
| (II) சாலையின் பரப்பளவு மற்றும் மூலை முடுக்குகளின் பரப்பு | : 2200.67 ச.மீ |
| (III) மனைப்பிரிவு சாலை போக மீதம் உள்ள பரப்பு | : 4767.33 ச.மீ |
| (IV) மனைப்பிரிவு எல்லை | ------------------------------------------ |
| (V) உத்தேச சாலை | ------------------------------------------ |
| (VI) நிலையில் உள்ள சாலை | ------------------------------------------ |
| (VII) கோரிய மனைகள் | : 39 |
| (VIII) ஒதுக்கிய மனைகள் | : 37 |

அரசானை என் 18: நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019-ன் படி பூங்காவிற்கான அரசு வழிகாட்டி மதிப்புத்தொகை மனுதாரரால் செலுத்தப்பட்டது.

**பொதுஒதுக்கீடு:**

1. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடுக்குகளின் பரப்பளவு : 2200.67 ச.மீ
2. மூலை முடுக்கு 7.20மீ முதல் 12.00மீ வரை : 1.5மீ x 1.5மீ

(TNCD & BR 2019, 47(8)-ன் படி தானமாக ஒப்படைக்க வேண்டிய 1% ஒதுக்கீடு)

3. உள்ளாட்சிக்கான ஒப்படைக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீட்டின் பரப்பளவு (A) : 32.63ச.மீ - (0.68%)
4. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு (B) : 30.03ச.மீ - (0.63%)

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொதுஒதுக்கீடு மற்றும் A,B ஒதுக்கீட்டிற்கான ஆவண எண்:2295/2025 நாள்:04-09-2025

**நிபந்தனைகள்**

1. இம்மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடத்தில் எவ்வித நில ஆர்ஜித நடவடிக்கையும் இல்லை என்பதையும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலரால் பெறப்படவில்லை என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. அரசானை என் 18–ன்,நகராட்சி (ம) குடிநீர் வழங்கள் துறை நாள் 4.2. 2019–ன் விதி எண்: 47(6) ன் படி பூங்கா ஒதுக்கீடு செலுத்தப்பட்டது.
3. அரசானை என் 181–ன், நகராட்சி (ம) குடிநீர் வழங்கள் துறை நாள் 09. 12. 2020–ன் படி இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
4. நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசிலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அரியப்பட்டதால்அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர ஊரமைப்பு இயக்குனர் சென்னை அவர்களால் இரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறை ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் முன்பு விண்ணப்பதாரின் பேரில் உள்ள நிலஉரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி /திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்புவிண்ணப்பதாரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் கிரயப்பத்திரம்,குத்தகை பத்திரம்பட்டா,தானப்பத்திரம்,பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதாஎன்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொத்தமான அமைப்பு அல்ல.
7. நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கதல்ல.
8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6x4 அள்விலான நிரந்துதகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.
9. இம்மனைப்பிரிவில் இருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கபட்டுள்ள மனைப்பிரிவு சாலையின் குறுக்கே சாலையின் போக்கிற்கு பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டு இருப்பின் அதனை அகற்றப்பட வேண்டும்.
10. மனைப்பிரிவில் அமையும் நீர்வழி பாதையினை தடை செய்யாமல் பைப் அல்லது கல்வர்ட் அமைத்து மனைகளுக்கு செல்லும் பாதையாக அமைத்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ம . வ / ந . ஊ . உ . இ (க.மா) எண்: 143/2025

சு.கோபாலகிருஷ்ணன்
அளவர்/ உதவி வரைவாளர்

மு.திருமால்
வரைவாளர் நிலை - III

பெ.மரியதாஸ்
மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை - II

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கள்ளக்குறிச்சி மாவட்டம்

Signature Not Verified